FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 12 (2021) | கிறிஸ்தவம் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

**பகுதி I**

❖ **மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து தரப்பட்டுள்ள புள்ளடி இடுக.**

1) கி.மு. 701 இல் அசீரிய அரசர் செனகரீப்பினால் தென்னரசு அழிவற்ற காலத்தில் நம்பிக்கை இழந்த மக்களுக்கு நம்பிக்கை வழங்க அழைக்கப்பட்ட இறைவாக்கினர்.
1. எரேமியா 2. ஏசாயா 3. மீக்கா
4. செக்கரியா 5. எசேக்கியேல்

2) நல்லுரை கேட்பதில் சிந்தனையை செலுத்து. அறிவூட்டும் மொழிகளுக்குச் செவி கொடு. (நீதி மொழிகள் 23 : 12) இவ்விடயத்தின் மூலம் வெளிப்படும் ஞானம்.
1. கோத்திர ஞானம் 2. அரச சபை ஞானம் 3. ஆன்மீக ஞானம்
4. அன்றாட வாழ்வு பற்றிய ஞானம் 5. பழைய ஏற்பாட்டு ஞானம்

3) பாலஸ்தீன பிரதேசத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் பொறுப்பாகச் செயற்பட்ட உரோமைய ஆளுநர்.
1. பொந்தியு பிலாத்து 2. ஏரெது அந்திபஸ் 3. ஏரோது பிலிப்பு
4. அர்க்கலாவு 5. பெரிய ஏரோது

4) “தாவீது அரசு எனும் மரத்தில் அரச தளிர் ஒன்று புறப்படும்….” இங்கு அரச தளிர் என்று குறிப்பிடப்படுவது.
1. இறைவாக்கினர் 2. மெசியா 3. வெளிச்சம்
4. இயேசு 5) அரசன்

5) சீனாய் உடன்படிக்கையின் பத்துக்கட்டளைகளில் நிறைவேற்றுச் சட்டங்களாகக் காணப்படும் கட்டளைகளில் ஒன்று.
1. உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே.
2. ஓய்வு நாளை தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு.
3. கொலை செய்யாதே.
4. உன் தந்தையையும் தாயையும் மதித்து நட.
5. என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது.

6) உடன்படிக்கை என்பதன் எபிரேய சொல்.
1. பெரித் 2. கொஹேன் 3. பிறபெற்றஸ்
4. சித்னா 5. இரகபோத்து

7) “நாடு புலம்புகின்றது அதில் குடியிருப்பன எல்லாம் அழிந்து போகின்றன. காட்டு விலங்குகளும், வானத்துப்பறவைகளும் கடல்வாழ் மீன்களும் கூட அழிந்து போகின்றன. மனிதனின் ஒழுக்கமற்ற வாழ்வினால் இயற்கைக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது எனக் கூறிய இறைவாக்கினர்.

1. ஏசாயா  2. எரேமியா  3. ஓசேயா
4. ஏசேக்கியேல்  5. ஆமோஸ்

8) “என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்? என்னைக் காப்பாற்றாமலும்…..” திருப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள இப்பாடல் கிறிஸ்துவின் வாழ்வின் வெளிப்பட்ட சந்தர்ப்பம்.

1. சிலுவை மரத்தில்  2. மலைப் பொழிவு  3. கெத்சமனே தோட்டம்
4. கடைசி இராப் போசனம்  5. பாதங்கழுவுதல்

9) ‘கன்னி கருவுற்று ஒரு ஆண் மகனைப் பெற்றெடுப்பாள்’. இம்மானுவேல் என்ற பெயரை வைப்பாள். இம்மானுவேல் என்பதன் பொருள்

1. யாவே மீட்பர்  2. கடவுள் நம்முடன் இருக்கிறார்
3. கடவுள் மீட்பர்  4. அருட் பொழிவு பெற்றவர்
3. இறைவன் உயர்த்தினார்

10) விடுதலைப் பயணத்தில் அமலேக்கியருடனான போரில் மோசேயின் இரு கரங்களையும் தாங்கிப்பிடித்தவர்கள்.

1. ஆரோன், யோசுவா  2. இத்திரோ, சிப்போரா  3. ஆரோன், மிரியம்
4. ஆரோன் - கூர்  5. மக்களின் தலைவர்கள், யோசுவா

11) மாசா – மெரிபா என்ற எபிரேயச் சொல்லின் பொருள்

1. சோதித்தல், மன்னித்தல்  2. சோதித்தல், தண்டித்தல்  3. சோதித்தல், வாதாடுதல்
4. வாதாடுதல், தண்டித்தல்  5. வாதாடுதல், மன்னித்தல்

12) உயிருள்ள எல்லோருக்கும் அவளே தாய் இக் கூற்றுடன் தொடர்புடையவர் யார்?

1. ஏவாள்  2. சாராள்  3. எலிசபெத்
4. மரியாள்  5. மிரியம்

13) நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை உண்ணுதல் என்பதன் கருத்துப் புலப்படுத்துவது.

1. இறைவனோடு இணைந்திருத்தல்
2. சாகா வரத்தைப் பெறுதல்.
3. இறை பாதுகாப்பு பெறுதல்.
4. இறைவனுக்குரிய அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தல்.
5. மனித சுதந்திரத்தை இழத்தல்.

❖ **14 – 16 வரையான வினாக்களிற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடை தருக.**

A – காயீன்  B – ஆபெல்  C – நோவா
D – ஆதாம்  E – ஆபிரகாம்  F - ஈசாக்

14) நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே. உண்ணும் நாளில் சாகவே சாவாய்……..

1. A 2. B 3. D 4. C 5. F

15) வானுலகின் கீழ் உயிருள்ள எல்லாவற்றையும் அழிப்பதாக. மண்ணுலகின் மேல் வெள்ளப்பெருக்கு வரச் செய்வேன். இக்கூற்றுடன் தொடர்புடையவர்.

1. D 2. C 3. A 4. B 5. E

16) நீ நல்லது செய்தால் உயர்வடைவாய், நல்லது செய்யாது விட்டால் பாவம் உன்மேல் வேட்கை கொண்டு உன் வாயிலில் படுத்திருக்கும் - இக்கூற்றுடன் தொடர்புடைய நபர்.

1. B 2. C 3. D 4. A 5. E

17) எருசலேம் தேவாலயத்தில் மட்டும் நடைபெறும் விழாக்கள்

1. பாஸ்கா விழா, அறுவடை விழா, பாவப்பரிகார விழா
2. பாஸ்கா விழா, அறுவடை விழா, கூடார விழா
3. பாஸ்கா விழா, அறுவடை விழா, பெந்தக்கோஸ்து விழா
4. அறுவடை விழா, கூடார விழா, காணிக்கை விழா
5. கூடார விழா, அறுவடை விழா, பெந்தக்கோஸ்து விழா

18) தாவீதைத் திருப்பொழிவு செய்தவர்.

1. ஏலி 2. சவுல் 3. சாமுவேல்
4. யெஸ்கே 5. மெல்கி சேதேக்

19) ஆபிரகாமின் அழைப்பின் இரண்டு முக்கிய அம்சங்கள்

1. தியாகம், சவால் 2. தியாகம், அன்பு 3. நம்பிக்கை, அன்பு
4. நம்பிக்கை, எதிர்நோக்கு 5. தியாகம், எதிர்நோக்கு

20) இறைவனின் அதி உயர் மகிமையை வெளிப்படுத்தி கனவில் தேவதூதர்கள் தோன்றும் காட்சிகளை எடுத்துக்கூறும் மரபு.

1. J 2. D 3. F 4. E 5. L

(1 x 20 = 20 புள்ளிகள்)

## பகுதி II

**அறிவுறுத்தல்.**

- **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து, நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

## பகுதி I

1) 1. சீனாய் மலையில் மோசேயுடன் கடவுளைக் காணச்சென்ற இருவரின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)
   2. பத்துக்கட்டளைகளில் காணப்படும் பண்புகளில் இரண்டினைத் தருக? (04 புள்ளிகள்)
   3. சீனாய் உடன்படிக்கையின் மூலம் இஸ்ரயேல் மக்கள் பெற்ற விசேட இறையாசீர்கள் மூன்று எழுதுக. (06 புள்ளிகள்)
   4. இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் சீனாய் உடன்படிக்கை பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அம்மாற்றங்களுள் நான்கினை எழுதுக? (08 புள்ளிகள்)

2) 1. எழுத்து வடிவம் பெற்ற, பெரிய இறைவாக்கினர் இருவரின் பெயர்களை எழுதுக? (02 புள்ளிகள்)
   2. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களின் தூதுப் பணியில் காணப்படும் விசேட பண்புகள் இரண்டு எழுதுக? (04 புள்ளிகள்)
   3. இறைவாக்கினர் நாத்தான் தாவீது அரசருக்கு மெசியா பற்றி கூறிய இறைவாக்குகள் மூன்றினை எழுதுக? (06 புள்ளிகள்)
   4. மெசியாவின் பண்புகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக? (08 புள்ளிகள்)

3) 1. இறை அழைப்பில், இறைவனுடைய உன்னதமான தன்மையையும் மகிமையான பிரசன்னத்தையும் வெளிப்படுத்தும் அடையாளங்கள் இரண்டினை எழுதுக? (02 புள்ளிகள்)
   2. எரேமியா இறைவாக்கினர் பற்றி இரண்டு விடயங்கள் எழுதுக? (04 புள்ளிகள்)
   3. இறைவாக்கினர் ஓசேயாவின் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட அடையாளப் பெயர்கள் மூன்றினை எழுதுக? (06 புள்ளிகள்)
   4. எசாயா இறைவாக்கினர் குறிப்பிடும் துன்புறும் ஊழியன் எதிர் கொள்ளும் துன்புறுத்தல்கள் நான்கினை எழுதுக? (08 புள்ளிகள்)

## பகுதி – II

1) அ) பழைய ஏற்பாட்டு இறைவாக்கினரின் அழைப்பின் பின்னணியிலேயே மோசேயின் அழைப்பும் முன்வைக்கப்படுகின்றது. இவ் அழைப்பில் காணப்படும் பொதுப் பண்புகள் ஐந்தினை முன்வைத்து விளக்குக?
   ஆ) இன்றைய காலத்தில் இளைஞர் சமூகத்தில் கிடைக்கப்பெறும் இறை அழைப்பிற்கு நீர் எவ்வாறு பங்களிப்பு செய்வீர் என்பதை விளக்குக?

2) அ) பாலை நிலத்தில் இஸ்ராயேல் மக்கள் இறைபராமரிப்பை எவ்வாறு அனுபவித்தனர் என்பதைப் பற்றி 5 விடயங்களை முன்வைத்து விளக்குக?
   ஆ) இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு எம்மால் செய்யக்கூடிய விடயங்கள் ஐந்தினைக் குறிப்பிட்டு விளக்குக?

3) அ) ஆபிரகாமிடம் காணப்பட்ட விசேட குணாதிசயங்களால் இறைவனின் அன்பிற்குப் பாத்திரமானார். அவரிடம் காணப்பட்ட குணாதிசயங்கள் ஐந்தினை முன்வைத்து விளக்குக?
   ஆ) இன்றைய காலகட்டத்தில் கிறிஸ்தவர்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் தீர்வுகள் ஐந்தினைக் குறிப்பிட்டு விளக்குக?

4) அ) யூத சமூகத்தில் பெண்களின் நிலையினைப் பற்றி விளக்குக?
   ஆ) நீதித் தலைவர்களில் ஒருவரான தெபோராவின் வாழ்வின் மூலம் இன்று நாம் பெற்றுக் கொள்ளும் வழிகாட்டல்கள் ஐந்தினைக் குறிப்பிட்டு விளக்குக?